# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டம்

---

*[1981, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1981, திசெம்பர் மாதம் 18 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: ரூபா 1.30* *தபாற் செலவு: சதம் 75*

## 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டம்

[1981, திசெம்பர் மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 28/81
1441

பௌத்த தர்மத்தைப் பரப்புவதற்கும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் பாளிக் கற்கைகளை மேம்படுத்துவதற்கும் அத்துடன் பௌத்த மதத்திலும் பாளியிலும் பரீட்சைகளை நடாத்துவதற்குமாக இலங்கையில் பௌத்த, பாளி பல்கலைக்கழகங்களைத் தாபிப்பதற்கும் பேணுவதற்கும், நிருவகிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சனாதிபதி நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (அத்தேதி இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

### பாகம் I

### இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் தாபிக்கப்படுதல்

2. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு முரணாக, எது எவ்வாறிருப்பினும், இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் என்னும் பெயர்மகுடத்தைக் கொண்ட பல்கலைக்கழகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

இலங்கை பௌத்த, பாளிப் பல்கலைக்கழகம் தாபிக்கப்படுதல்.

(2) பல்கலைக்கழகம், (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரையும், இடையறுவழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெயரில் வழக்குத்தொடரலாம், அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

3. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாக அமைதல் வேண்டும் :—

பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்கள்.

(i) புத்த தர்மத்தை பரப்புதல் ;

(ii) பாளிப் படிப்புக்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மேம்படுத்தல் ; அத்துடன்

2—ஏ 59552—6,550 (12/81)

(iii) பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது பலவற்றைத் தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டவர்களான தனிப்பட்ட மாணவர்களுக்கும் ஒன்றிணைந்த கல்லூரி மாணவர்களுக்கும் பரீட்சைகளை நடாத்துதல் :—

(அ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும், தர்மதூத நடவடிக்கைகளை வளர்த்தல் ;

(ஆ) பிரிவேனைகள், பாடசாலைகள், அத்துடன் இவற்றையொத்த நிறுவனங்கள் என்பவற்றில் பௌத்தத்தையும், பாளியையும் கற்பிப்பதில் பிக்குமாருக்குப் பயிற்சியளித்தல் ;

(இ) பிக்குமாரின் ஒழுக்க நடையையும், மன ஒழுக்காற்றையும் பேணுவதற்கும் திருத்துவதற்கும் அவசியமான வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ஈ) மேற்கூறப்பட்ட எவையேனும் கருமங்களுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான வேறேதேனும் கருமம்.

பல்கலைக் கழகத்தின் தத்துவங்கள்.

4. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பரீட்சை நோக்கங்களுக்காக, இணைப்புக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களையும், தனிப்பட்ட மாணவர்களையும் பதிவுசெய்தல் ;

(ஆ) பல்கலைக்கழகப் பரீட்சைகளிலே தேறிய ஆட்களுக்கும் தேறிய ஆட்கள் மீதும், பட்டங்களையும், டிப்புளோமாக்களையும், வேறு கல்விச் சிறப்புகளையும் வழங்குதலும், சூட்டுதலும் ;

(இ) ஆராய்ச்சிப் புலமைப் பரிசில்களை ஏற்படுத்துதலும் வழங்குதலும் அத்துடன் பௌத்த, பாளிக் கல்வியை மேற்கொண்டொழுகுவதற்காக ஏற்றவர்களான பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு மானியக்கொடைகள் வழங்குதலும் ;

(ஈ) பேராசிரியர் பதவிகளையும், இணைப்பேராசிரியர் பதவிகளையும், பரீட்சகர் பதவிகளையும், பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பதவிகளையும் ஏற்படுத்தல் ;

(உ) இலங்கையிலுள்ள இணைப்புக் கல்லூரிகளில் மாணவர்களையும் அல்லது வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களையும், தனிப்பட்ட மாணவர்களையும், பல்கலைக்கழகத்தின் பட்டங்களையும், டிப்புளோமாக்களையும், பிற கல்விச் சிறப்புக்களையும் பெறுவதற்கு இயலச் செய்வதற்காகப் பரீட்சைகளை நடாத்துதல் ;

(ஊ) பல்கலைக்கழகத்திலுள்ள பதவிகள் அனைத்திற்கும் நியமனங்கள் செய்தல் ;

(ஏ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை இறுதிவிருப் பாவணக்கையளிப்பு என்பனவகையாக அல்லது வேறுவகை யாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசை வற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெற்று வைத்திருக்கலாம் என் பதுடன், பல்கலைக்கழக ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள், மட்டுப்பாடுகள், தடை கள் என்பவற்றுக்கமைய அதை விற்கலாம், சாட்டுதல் செய்ய லாம், கொடுத்து மாற்றலாம், அல்லது வேறு வகையில் கையாள லாம் ;

(ஏ) பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகளை நடாத்துவதற்கான இணைப்புக் கல்லூரிகளாகப் பொருத்தமான கல்விநிறுவனங்களை அங்கீகரித்தல் ;

(ஐ) பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை முழு மையாக அல்லது பகுதியளவில் கொண்டுள்ள, இலங்கையிலுள் ளனவான, அல்லது வெளிநாட்டிலுள்ளனவான கல்விசார் நிறு வனங்களுடன் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புக் கெனவும், அவற்றின் பொதுக்குறிக்கோள்களுக்கு உசிதமானவை யாக இருக்கக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்கெனவும் உடன் படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும் ;

(ஒ) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக, நூலகங்களையும் வேறு கட்டிடங்களையும் நிறுவுதலும், வசதிகளை அமைத்தலும், பேணு தலும் ;

(ஓ) காலத்திற்குக்காலம் ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கட்டணங்களைக் கோருதலும், பெறு தலும் ;

(ஔ) மாணவர் கடன் பெறும் நோக்கத்திற்காக ஏற்பாடு செய்யும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க, வங்கிகளிலிருந்தும், வேறு முகவர் நிலையங்களிலிருந்தும் இணைப்புக் கல்லூரி மாணவர்கள் கடன் பெறுவதற்கு உதவுதல் ;

(க) பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள், அலுவலர்கள், வேறு ஊழியர்கள் ஆகியோரின் வதிவிடம், ஒழுக்காறு, நல்வாழ்வு என்பவற்றை ஒழுங்குபடுத்தலும் அவற்றிற்கு ஏற்பாடு செய்தலும் ;

(ங) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் தத்துவங் களைப் பயனுறப் பிரயோகிப்பதற்கும், 3 ஆம் பிரிவில் எடுத்துக் காட்டப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமானவை யான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களை யும் செய்தல்.

இனம், சமயக் கோட்பாடு, வகுப்பு அல்லது மதம் காரண மாக பாரபட்சம் காட்டுதல் தடைசெய்யப் பட்டுள்ளது.

5. நான்கு (உ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இலங் கையின் பிரசைகளாகவுள்ள ஆட்களும் இலங்கையில் சட்டமுறையாக உள்ள வேறு ஆட்களும் அவர்கள் ஆணாயிருப்பினும் சரி, பெண்ணாயிருப் பினும்சரி, எந்த இனத்தை, சமயக்கோட்பாட்டை அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்களாயினுஞ்சரி பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவதற்குரிய வர்களாதல் வேண்டும் ; அத்துடன், எவரேனும் ஆள், ஆங்கு பட்டம் பெறுவதற்கு, அல்லது அதில் ஏதேனும் நலனை அல்லது சிறப்புரிமையைத்

துய்ப்பதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு அவரை உரித்துடையவராக்குவதற்கு சமய நம்பிக்கை, அல்லது சமய ஒப்புதல் பற்றிய சோதனையெதுவும் மேற்கொள்ளப்படுதலோ அல்லது சுமத்தப்படுதலோவாகாது :

ஆயின் எவ்வாறாயினும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், பௌத்தர்களின் உரிமைகளுக்கும், சிறப்புரிமைகளுக்கும் எந்தவகையிலும் தீங்கு விளைவிப்பனவாகவோ அல்லது தீமையானவையாகவோ பொருள்கொள்ளப்படுதலாகாது.

பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகள்.

6. இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் கல்விசார் நிறுவனம் அல்லது பிரிவேனையினால் முகாமைசெய்யப்படுகின்ற ஏதேனும் கல்விசார் நிறுவனம், பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரியொன்றாக அங்கீகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படவேண்டும் எனப் பேரவைக்கு எழுத்தில் விண்ணப்பிக்கலாம். ஒழுங்கு விதி மூலம் பேரவையினால் ஆக்கப்படக்கூடியவாறான, அத்தகைய நிபந்தனைகளுடன் அத்தகைய நிறுவனங்கள் ஒத்திசையுமாயின் பேரவையானது அத்தகைய நிறுவனங்களைப் பதிவு செய்யலாம் :

ஆயின், எவ்வாறாயினும் முன்னணியிலுள்ள பிரிவேனைகளான வித்தியோதய, வித்தியாலங்கார ஆகியவற்றுள் ஒன்று அல்லது இரண்டும் முறையே தத்தம் பிரிவேனைகளிலே உயர்கல்வி நிறுவனங்களைத் தாபித்திருந்தும், அவற்றை இணைந்த கல்லூரிகளாக அங்கீகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று எழுத்தில் விண்ணப்பித்துமிருப்பின், பேரவையானது அவற்றை முதன்மையான இணைந்த கல்லூரிகளாகப் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கல்லூரிகளை அபிவிருத்தி செய்வதில் நிதியுதவி செய்தலும் வேண்டும்.

பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கான கட்டாய பாடங்கள்.

7. பௌத்தம், பாளிமொழி என்பன முதலாவது பட்டப் பரீட்சைக்கான கட்டாய பாடமாக்கப்படுதல் வேண்டும். பௌத்தத்தோடும், பாளிமொழியோடும் தொடர்பான ஏதேனுமொரு பாடம், பட்டப் பின் படிப்புப் பட்டப் பரீட்சைக்குக் கட்டாய பாடமாதல் வேண்டும்.

## பாகம் II

### பல்கலைக்கழகத்தின் வேந்தரும் அலுவலர்களும்

வேந்தர்.

8. (1) பல்கலைக்கழகத்தின் வேந்தராக, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட மகாநாயக்க தேரோவுடன் தொடங்கி பின்வருவோர் சுற்றிவரு முறையில் பதவிவகித்தல் வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் ஈராண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் :—

(அ) சயாம் நிகாயவைச் சேர்ந்த மல்வத்தைப் பீடத்தின் மகாநாயக்க தேரோ ;

(ஆ) சயாம் நிகாயவைச் சேர்ந்த அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரோ ;

(இ) இலங்கை அமரபுர மகாசங்க சபையில் அப்போதைக்குத் தலைவராகப் பதவிவகிக்கும் மகாநாயக்க தேரோ ; அத்துடன்

(ஈ) இலங்கை ராமன்ய நிகாயவின் மகாநாயக்க தேரோ.

(2) வேந்தர், பல்கலைக்கழகத்தின் முதல்வராதல் வேண்டும் என்பதுடன், அவர் சமுகமாக இருக்கும்போது, பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்புவிழா எதற்கும் தலைமை தாங்குதல் வேண்டும்.

(3) வேந்தர் பதவியை வகிக்கும் மகாநாயக்க தேரோ இறக்குமிடத்து அல்லது அவரால் பதவி வறிதாக்கப்படுமிடத்து, அத்தகைய மகாநாயக்க தேரோவுக்கு அடுத்தமையும் மகாநாயக்க தேரோ, தமக்கு முன்னமைந்தாரின் முடிவுறாது எஞ்சியிருக்கும் பதவிக்காலத்திற்கு வேந்தர் பதவியை வகித்தல் வேண்டும்.

9. பல்கலைக்கழக அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும் :— பல்கலைக்கழக அலுவலர்கள்.

(i) துணை வேந்தர் ;

(ii) பதிவாளர் ;

(iii) நூலகப் பொறுப்பாளர் ;

(iv) நிதியாளர் ; அத்துடன்

(v) எந்தப் பதவியை வகிப்பவர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அலுவலரொருவராக இருக்கின்றாரோ அந்தப் பதவியென ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்பட்ட வேறு பதவி எதையும் வகிப்பவர்.

10. (1) (அ) பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பிக்கு ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், சனாதிபதியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். அடுத்துவரும் துணைவேந்தர் ஒவ்வொருவரும் பிக்கு ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியால் நியமிக்கப்படலும் வேண்டும். துணைவேந்தர் ஒருவர் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதல் வேண்டும். துணைவேந்தராகப் பதவி வகித்த அவரின் கடைசிப் பதவிக்காலம் முடிவுற்ற தேதியிலிருந்து, மூன்றாண்டு காலப்பகுதி முடிவுற்ற பின்னர் தவிர, துணைவேந்தராகப் பதவிவகித்து இரண்டு தவணைகள் நிறைவுற்றதன்மேல், துணை வேந்தர் எவரும் மீள்நியமனத்திற்குத் தகுதியுடையராதலாகாது. துணைவேந்தர்.

(ஆ) எந்தத் துணைவேந்தர் தமது பதவிக்காலம் முடிவுற்றமை காரணமாக, அல்லது பதவி துறந்தமை காரணமாகப் பதவியை வறிதாக்குகின்றாரோ, அந்தத் துணைவேந்தர் எவரும், துணைவேந்தர் பதவிக்கு அவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் வகித்த நிலையான பதவிக்குத் திரும்பப் போவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விசேட கூட்டமொன்றில், அம்மன்றின் மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றிலிரண்டு பங்குக்குக் குறையாத வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானமொன்றின்மேல், பல்கலைக்கழகத் துணைவேந்தர், அவரது பதவியிலிருந்து வேந்தரினால் அகற்றப்படுதல் வேண்டும்.

(2) துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும், பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர், பேரவையில் பதவிவழி உறுப்பினராக இருத்தல் வேண்டும். பேரவைக் கூட்டங்களுக்குத் துணைவேந்தர் தலைமைதாங்குதல் வேண்டும். பேரவையின் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கும், அதில் சமுகமளிப்பதற்கும், உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பேரவையால், அதன்சார்பில் துணைவேந்தருக்குக் காலத்துக்குக் காலம், சட்டமுறையாக இடப்பட்ட அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, இச்சட்டத்தினதும், ஏதேனும் ஒழுங்குவிதியினதும் ஏற்பாடுகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுதலை உறுதிசெய்தல் அவரது கடமையாதல் வேண்டும்; அத்துடன், அந்நோக்கத்துக்காக அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவர் அதனைப் பிரயோகிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையின் முடிவுகளுக்குப் பயனளித்தல் அல்லது பயனளிக்கப்படுதலை உறுதிசெய்தல் துணைவேந்தரின் கடமையாதல் வேண்டும்.

(5) துணைவேந்தரே, பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(6) பல்கலைக்கழக எல்லைக்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பேணுதல் துணைவேந்தரின் பொறுப்பாதல் வேண்டும்.

(7) துணைவேந்தர், அவர் தம் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய அல்லது (1) (இ) என்னும் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மூன்றாண்டுக் காலத்துக்கு, அல்லது அவர் அறுபத்தெட்டு வயதை நிறைவுசெய்யும்வரையில், இவற்றில் எது முன்னதாக நடைபெறுகின்றதோ அதுவரை, பதவிவகித்தல் வேண்டும்.

(8) துணைவேந்தர், லீவு காரணமாக, சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருப்பின், அத்தகைய இயலாமை நிகழ்வுற்றதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், பேரவை, அப்பதவிக்கான கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்குத் தக்கதென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரையில் அப்பதவிக்குரிய வழமைமுறையான கடமைகளைப் பதிவாளர் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

பதிவாளர்.

11. (1) பல்கலைக்கழகத்தின் முதலாவது பதிவாளர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துவரும் பதிவாளர் ஒவ்வொருவரும் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் ஒரு பௌத்தராகவும் முழுநேர அலுவலராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியினால் அவருக்கு அளிக்கப்படக்

கூடிய அல்லது சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அவர் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்தின் பதிவேடுகளினதும், ஆதனத்தினதும் கட்டுக் காவலுக்குப் பேரவையின் சார்பில் பதிவாளரே பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) பதிவாளரே பேரவையின் பதவிவழிச் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) பதிவாளரே பல்கலைக்கழகத்தின் உதவிக் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) பதிவாளர், துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, பல்கலைக்கழகத்தின் பொது நிருவாகத்திற்கும், அதன் கல்வித் துறைசாரா பணியாட்டொகுதியின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

நூலகப் பொறுப்பாளர்

12. (1) பல்கலைக்கழகத்தின் முதலாவது நூலகப் பொறுப்பாளர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துவரும் நூலகப் பொறுப்பாளர் ஒவ்வொருவரும் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியினால் அவருக்கு அளிக்கப்படக்கூடிய அல்லது அவர்மேல் சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரிதலும் வேண்டும்.

(2) நூலகப் பொறுப்பாளர், துணைவேந்தரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழக நூலகத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

நிதியாளர்.

13. (1) பல்கலைக்கழகத்தின் முதலாவது நிதியாளர் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துவரும் நிதியாளர் ஒவ்வொருவரும் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர் ஒரு குருத்துவம் சாராப் பௌத்தராகவும், முழுநேர அலுவலராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தினால் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்படக்கூடிய, அல்லது அவர்மேல் சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) நிதியாளர், பதிவாளரின் பணிப்புக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய, பல்கலைக்கழக நிதிகளின் நிருவாகத்துக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அதன் கணக்குகளை ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பேணுதலும் வேண்டும். பல்கலைக்கழக நிதிகள் அவரது கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

22 ஆம், 23 ஆம், 24 ஆம், 25 ஆம் பிரிவுகள் இல அலுவலர்களுக்கு ஏற்புடைத்தாதல்.

14. இருபத்திரண்டாம், இருபத்து மூன்றும், இருபத்து நான்காம், இருபத்தைந்தாம் பிரிவுகளின் ஏற்பாடுகள் துணைவேந்தர் தவிர்ந்த பிற அலுவலர் ஒவ்வொருவருக்கும், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடைத்தாதல் வேண்டும்.

## பாகம் III

### பல்கலைக்கழகத்தின் அதிகாரசபை

பல்கலைக்கழகத்தின் அதிகார சபை.

15. பல்கலைக்கழகத்தின் அதிகாரசபை, பல்கலைக்கழகத்தின் பேரவையாதல் வேண்டும்.

பேரவை.

16. (1) இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும் பல்கலைக்கழகத்தின் பேரவையானது, பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுக் குழுவாகவும், ஆளும் குழுவாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், துணைவேந்தரையும், (இதனகத்துப்பின்னர், நியமிக்கப்பட்ட உறுப்பினர் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு பதினான்கு உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒன்பதுபேர் பிக்குகளாதல் வேண்டும்.

(2) துணைவேந்தரே பேரவையின் தவிசாளராதல் வேண்டும். பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் அவரே தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் கூட்டமொன்றில் தலைமைதாங்க இயலாதவராக இருந்தால், உறுப்பினர்கள், அங்கே சமுகமாகவிருக்கும் உறுப்பினர் எவரையும், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குத் தெரிவுசெய்யலாம்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவருடைய பதவிக்காலம் முடிவடையுமுன்னர் அவரது பதவியை வறிதாக்கினாலொழிய அவருக்கு முன்னிருந்தவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் பேரவைக்கு முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட கடிதம் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) பேரவையிலிருந்து வராதிருப்பதற்கு அனுமதிபெறாது, அடுத்து வரும் மூன்று பேரவைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதவரான நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், பேரவையின் உறுப்பினர் என்ற அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும்; அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுந்த ஆளொருவரைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(6) பேரவையின் உறுப்பினர் ஒருவர் எத்தகைய ஊதியத்திற்கும் உரித்துடையராதலாகாது; ஆனால் சனாதிபதியானவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடன் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கும் அத்தகைய படிகள் அவருக்குக் கொடுக்கப்படலாம்.

(7) பேரவையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண், அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொரு பங்கினதாக இருத்தல் வேண்டும்.

(8) பேரவை ஒவ்வோர் ஆண்டிலும் எவ்வாறாயினும் பத்து முறைகளுக்குக் குறையாதவாறு கூடக்கூடியதாக அவசியமாகும்போதெல்லாம் கூடுதல் வேண்டும்.

(9) பேரவையின் தவிசாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம், அல்லது பேரவையின் மொத்த உறுப்பினர் தொகையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப்பெறுவதன்மேல், ஒரு கிழமைக்குள் பேரவையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல்வேண்டும்.

பேரவையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்.

17. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பேரவை பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதோடு கடமைகளையும், பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் பேரவைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, பேரவை பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(i) பல்கலைக்கழகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும் ;

(ii) பல்கலைக்கழகத்திற்கென மரபுச் சின்னமொன்றைத் தெரிந்தெடுத்தலும், பல்கலைக்கழகத்தின் பொது இலச்சினையின் வடிவத்தைத் தீர்மானித்தலும், அதன் கட்டுக்காவலுக்கு ஏற்பாடுசெய்தலும், அதனைப் பயன்படுத்தும் முறைபற்றிப் பணித்தலும் ;

(iii) இச் சட்டத்தினதும், எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க, பல்கலைக்கழகத்தோடு தொடர்பான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும், தீர்மானித்தலும் ;

(iv) குறித்த நோக்கங்களுக்காகப் பல்கலைக்கழகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட நிதிகள் எவற்றையும் நிருவகித்தல் ;

(v) பல்கலைக்கழகத்துக்கு மானசாதனக்கொடை மூலமும், நன்கொடைகள் மூலமும், வழங்கல்கள் மூலமும் கிடைக்கும் ஆதனங்களைப் பெற்றுக்கொள்ளுதலும், ஏற்றுக்கொள்ளுதலும் ;

(vi) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையையும், ஆண்டுக் கணக்குகளையும் பரிசோதனை செய்தலும், அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் ;

(vii) பல்கலைக்கழகப் பரீட்சைகட்கு அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகட்கு ஏற்பாடுசெய்யும் நோக்கத்திற்காக, எந்த நிபந்தனைகளுக்கு அமைவாக நிறுவனங்கள் ஒன்றிணைந்த கல்லூரிகளாகப் பதிவு செய்யப்படக்கூடுமோ அந்த நிபந்தனைகளை ஆக்குதல் ;

(viii) பல்கலைக்கழகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தல் ;

(ix) பல்கலைக்கழகத்தின் அலுவலர்களாக அல்லது வேறு ஊழியர்களாக நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகைமைகளைத் தீர்மானித்தல் ;

(x) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒழுங்குவிதிகளை ஆக்குதல் ;

(xi) பல்கலைக்கழகத்தின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருட்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடுசெய்தல் ;

(xii) பேராசிரியர்களையும், இணைப் பேராசிரியர்களையும் அத்துடன் பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதியிலிருந்தோ அல்லது வேறெங்கிலுமிருந்தோ, பரீட்சிப்பவர்களையும் நியமித்தலும் : அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய சம்பளங்களை அல்லது கட்டணங்களைத் தீர்மானித்தலும் ;

(xiii) பல்கலைக்கழகத்தில் தொழிலுக்கு ஆட்களை நியமித்தலும், நிறுத்திவைத்தலும், வேலைநீக்கஞ் செய்தலும் அல்லது வேறு வகையாகத் தண்டித்தலும் ;

(xiv) பல்கலைக்கழகத்தின் வேந்தரினதும், அலுவலர்களினதும், பட்டதாரிகளினதும் கல்விசார் உடையை அல்லது விருதுச் சின்னத்தை அல்லது அவை இரண்டையும் பற்றித் தீர்மானித்தல் ;

(xv) பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு மாணவர்களைப் பதிவுசெய்வதற்கு அவசியமான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(xvi) பல்கலைக்கழகத்தின் எத்தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு இச்சட்டத்தில் வேறு ஏற்பாடுகள் செய்யப்படவில்லையோ அத்தகைய வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல்.

*நிமித்த குழுக்களை நியமித்தல்.*

18. குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றுடன் கூடிய, பேரவையின் அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்கள் அல்லது வேறு ஆட்கள் அல்லது அவர்கள் இருசாராரையும் கொண்ட நிமித்த குழுக்களைக் காலத்துக்குக் காலம் பேரவை நியமிக்கலாம்.

## பாகம் IV

### பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

*பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை நடாத்துதல்.*

19. (1) பல்கலைக்கழகம் பட்டம் வழங்கும் நோக்கத்துக்காக, வேந்தரால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியில் பட்டமளிப்பு விழாவொன்றினை ஆண்டுக்கொருமுறை நடாத்தல் வேண்டும் :

ஆயின், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு வரை, பட்டமளிப்பு விழா நடாத்துவது வேந்தரின் தற்றுணிபின்படியாகும் :

ஆயின், மேலும், வேந்தர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு நேரத்தில், பல்கலைக்கழகம் சிறப்புப் பட்டமளிப்பு விழாவொன்றை நடாத்தலாம்.

(2) பட்டமளிப்பு விழாவொன்றின் நடவடிக்கைமுறை ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) வேந்தர் சமூகமாயிருப்பின் அவரே பட்டமளிப்பு விழாவுக்கு தலைமைதாங்குதல் வேண்டும். அவர் சமூகமளிக்காதபோது துணைவேந்தர் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

## பாகம் V

### பணியாட்டொகுதிக்கான நியமனங்கள்

20. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனம் ஒவ்வொன்றும், ஒழுங்கு விதியினால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், நியமனத்துக்கான நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்க, பேரவையினால் செய்யப்படுதல் வேண்டும். பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் பேரவையினால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும் நியமனத்திற்கான நடவடிக்கைமுறைகளுக்கும் இணங்க, பேரவை பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குப் பின்வரும் நியமனங்களைச் செய்தல் வேண்டும் :—

(i) இச்சட்டத்தின்கீழ் அலுவலர் பதவி தொடர்பில் வேறு ஏற்பாடு குறிப்பாகச் செய்யப்பட்டிருக்குமிடத்துத் தவிர, அலுவலர் பதவிக்கான நியமனம் ;

(ii) ஓர் அலுவலர் அல்லது ஒரு பரீட்சிப்பவர் அல்லாததும், ஆண்டொன்றுக்கு ஒன்பதாயிரம் ரூபாவுக்கு குறையாத தொடக்கச் சம்பளத்தைக் கொண்டதும் அல்லது பேரவையானது ஒழுங்கு விதியால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறு கூடுதலான தொடக்கச் சம்பளத்தைக் கொண்டதுமான ஒரு பதவிக்கான நியமனம் ; அத்துடன்

(iii) ஒழுங்குவிதியால் விதித்துரைக்கப்படக்கூடியவையும், பதவியின் ஒரு தரத்திலிருந்து அல்லது வகுப்பிலிருந்து வேறொரு தரத்துக்கு அல்லது வகுப்புக்கு நியமத்தரானவர் பதவியேற்றம் பெறுவதை உள்ளடக்குவதுமான அத்தகைய பதவிகளுக்கான நியமனம்.

21. (1) ஒரு பரீட்சிப்பவர் பதவி தவிர்ந்த பதவியொன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும், முதற்கண் மூன்றாண்டுக்கான தகுதிகாண்நிலைக் காலத்துக்கானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதன்பின்னர், பேரவையால் உறுதிசெய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும். பதவிகளுக்கான நியமனம்.

(2) பரீட்சிப்பவர் பதவியொன்றுக்கான நியமனம் ஒவ்வொன்றும் அத்துடன் சேவை நியதிகளும் நிபந்தனைகளும் அதன் சார்பில் பேரவையால் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகட்கு இணங்கியனவாக இருத்தல் வேண்டும்.

22. பரீட்சிப்பவர் அல்லாத வேறு ஏதேனும் பதவிவகிப்பவர், அவரது ஐம்பத்தைந்தாம் வயதை எய்தும்வரையில், பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவர் சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும் : பரீட்சிப்பவர்கள் அல்லாத வேறு ஆட்கள் ஓய்வு பெறுதல்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் பதவியை வகிப்பவருக்கு, அவரது எழுத்திலான வேண்டுகோளின் பேரில் பேரவையால், அவர் தமது அறுபதாம் வயதை எய்தும்வரையில் ஒருமுறைக்கு ஓராண்டாக, சேவை நீடிப்புகள் வழங்கப்படலாம் என்பதுடன், அதன் பின்னர் அவர் ஓய்வுபெற்றவரெனக் கருதப்படுதலும் வேண்டும்.

**பதவிநீக்கம் அல்லது கட்டாய ஓய்வுக்கு எதிரான மேன்முறையீடு.**

23. (1) பரீட்சிப்பவர் பதவி அல்லாத வேறு ஏதேனும் பதவிவகிப்பவர், துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக, அல்லது கடமையைக் கைவிட்டமைக்காக எப்போதேனும், துணைவேந்தரால் விசாரணை முடியும் வரையில் இடைநிறுத்தி வைக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விசாரணை முடிவடைந்ததன்மேல், அத்தகைய துர்நடத்தைக்கு, திறமையின்மைக்கு அல்லது கடமையைக் கைவிட்டமைக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஆளெவரும் பதவிநீக்கஞ் செய்யப்பட வேண்டும் அல்லது கட்டாய ஓய்வு அளிக்கப்பட வேண்டும் என்று துணைவேந்தர் விதப்புரை கூறலாம். அதேநேரத்தில், அத்தகைய விதப்புரையானது, குற்றவாளியாகக் காணப்பட்ட ஆளுக்கு, துணைவேந்தரால் தெரியப்படுத்தலும் வேண்டும்.

(3) துர்நடத்தைக்காக, திறமையின்மைக்காக, அல்லது கடமையைக் கைவிட்டமைக்காக எந்த ஆளுடைய பதவிநீக்கம் அல்லது பதவியிலிருந்து கட்டாய ஓய்வு, (2) ஆம் உட்பிரிவின்கீழ் துணைவேந்தரால் விதந்துரைக்கப்பட்டதோ அந்த ஆளொவ்வொருவரும், அந்த விதப்புரையைப் பெற்று, பதினான்கு நாட்களுக்குள், அத்தகைய விதப்புரைக்கு எதிராகப் பேரவைக்கு முறையீடு செய்யலாம்; அதன்மேல் பேரவையின் முடிபே இறுதியானதாதல் வேண்டும்.

**பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களையும் உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் சேவையாளர்களையும் நியமித்தல்.**

24. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரது அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்தோடு, பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்தோடு பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம்; அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு, அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவருக்கும், எவர் தொடர்பிலும், 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன், அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட பகிரங்க சேவையிலுள்ள அலுவலரெவருக்கும், எவர் தொடர்பிலும், அச்சட்டத்தின் 13 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்கு அரசாங்கத்தில் வேலை செய்வதற்கு இணங்கி, ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ள எவரேனும் ஆளை, பேரவை வேலைக்கமர்த்துமிடத்து, பல்கலைக்கழகத்தில் ஆற்றும்

அவரது சேவைக் காலம் எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவரால் அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பேரவையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்துக்கேற்றவாறு, அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும் உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின், அல்லது அந்த உள்ளூரதிகாரசபையின் சம்மதத்தோடும், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கு, அதேபோன்ற சம்மதத்தோடு பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு விடயத்துக்கேற்றவாறு, அந்தப் பேரவையும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையும் அல்லது உள்ளூரதிகாரசபையும் இணங்கிக்கொள்ளக்கூடிய அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின் மீதும் (ஓய்வூதிய உரிமைகளும் சகாய நிதிய உரிமைகளும் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட) அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அல்லது உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலர் அல்லது சேவையாளர் பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராயிருக்கும் அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கு உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல்.

25. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனச் சேவையிலுள்ள ஓர் அலுவலர், விரிவுரையாளர் பேராசிரியர், இணைப் பேராசிரியர் அல்லது சேவையாளர், அவ்வலுவலரின் சம்மதத்தோடும், பல்கலைக்கழக மானியக்கொடை ஆணைக்குழுவினதும் அந்த நிறுவனத்தை ஆளும் அதிகாரசபையினதும் சம்மதத்தோடும், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கு அதேபோன்ற சம்மதத்தோடு பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராயிருக்கும் அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் VI

### இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக சகாய நிதியம்

**பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சகாய நிதியத்தைத் தாபித்தல்.**

26. "இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழக சகாய நிதியம்" என அழைக்கப்படவேண்டியதும், அறியப்பட வேண்டியதுமான நிதியமொன்றைப் பல்கலைக்கழகம் தாபித்தல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் இது "சகாய நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

**சகாய நிதியத்தை ஒழுங்குபடுத்தல்.**

27. சகாய நிதியத்தின் கட்டுப்பாட்டுக்காகவும், நிருவாகத்திற்காகவும், முகாமைக்காகவும் அத்துடன், அவற்றோடு தொடர்புபட்டனவும், அவற்றின் இடைநேர்விளைவானவையுமான எல்லாக் கருமங்களுக்காகவும், பேரவையானது ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

**சகாய நிதியத்துக்கான உதவு தொகைகள்.**

28. (1) ஒழுங்குவிதியால் தவிர்க்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, அவரது உழைப்புக்களில் பத்து சதவீதத்துக்குச் சமமான ஒருதொகையை, அவரது சம்பளத்திலிருந்து மாதந்தோறும் சகாய நிதியத்திற்கு உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டும்; அத்துடன் பல்கலைக்கழகம், மேலதிகமாக, அதன் நிதியத்திலிருந்து அதே நேரத்தில், ஒவ்வோர் உதவுதொகை செலுத்துநர் தொடர்பிலும், அந்த உதவுதொகை செலுத்துநரின் உழைப்புக்களில் பதினைந்து சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகையை அல்லது பேரவை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வேறொரு தொகையைச் சகாய நிதியத்திற்கு உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டும்.

(2) நிதியாளர், சகாய நிதியத்துக்காக ஒரு பொதுக் கணக்கையும், அந்தச் சகாய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துநர் ஒவ்வொருவர் தொடர்பிலும், வெவ்வேறு கணக்குகளையும் திறந்துவைத்திருத்தல் வேண்டும். சகாய நிதியத்துக்கு ஓர் உதவுதொகை செலுத்துநராற் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், அந்த உதவுதொகை செலுத்துநர் தொடர்பில் பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், சகாய நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநருக்குள்ள கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓர் உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் வரவிலிருக்கும் தொகையானது, அதன் சார்பில் பேரவையால ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அந்த உதவுதொகை செலுத்துநர் அந்தப் பல்கலைக்கழகத்தின் ஊழியத்திலிருந்து இல்லாதொழியும் தேதிவரையில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து, பேரவையால் நிருணயிக்கப்படவேண்டிய வீதத்திலான கூட்டுவட்டியோடு திரட்டப்படுதல் வேண்டும்; அத்துடன், அத்தேதியில் உதவுதொகை செலுத்துநரின் கணக்கு மூடப்படுதல் வேண்டும். உதவுதொகை செலுத்துநரின் வரவிலிருக்கும் திரட்டப்பட்ட தொகையானது, கணக்கு மூடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள் கொடுக்கப்படாதவிடத்து, எந்தத் தேதியில் அவருடைய வரவிலிருக்கும் முழுத்தொகையும் கொடுக்கப்பட்டதோ அந்தத் தேதிக்கு முந்திய மாதத்தின் கடைசி நாள்வரைக்கும், இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதே வீதத்தில் வட்டி கொடுக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்கு, அத்தகைய பணத் தொகையைக் கொடுப்பதில் ஏற்படும் சுணக்கம், உதவுதொகை செலுத்து நரின் ஏதேனும் தவறு காரணமாக ஏற்படுமிடத்து, அவரது கணக்கு மூடப்பட்டபின் திரளும் வட்டி கொடுக்கப்படுதலாகாது.

உதவுதொகை செலுத்துநருக்கான மீள்கொடுப்பனவுகள்.

29. (1) இருபத்தெட்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 28 (3) ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு, எவரேனும் உதவு தொகை செலுத்துநருக்குக் கொடுக்கப்படவேண்டிய பணத்தொகை யானது, அவருக்கு நிதியாளரால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், 28 (3) ஆம் பிரிவின்கீழ் எந்தத் தேதியில் அவர் உதவுதொகை செலுத்துநராக இல்லாதொழிகின்றாரோ அந்தத் தேதிக்கு முன்னர், ஒன்றில் சுகவீனம் அல்லது இயலாமை காரண மாக, அல்லது அவர் எப்பதவியில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ, அப்பதவியானது இல்லாதொழிக்கப்படுவதன் காரணமாக, பல்கலைக்கழகத் தால் தொழிலுக்கமர்த்தப்படாதொழியுமிடத்து, அல்லது பல்கலைக்கழகத் தின் சேவையைத் தன்னிச்சையாக விட்டு விலகுமிடத்து, நிதியாளர், 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் அவ்வாறு தொழிலுக்கமர்த் தப்படாதொழிந்த தேதியன்று சகாய நிதியத்திலுள்ள அவரது கணக்கில், அவரின் வரவில் திரண்டுள்ள முழுத்தொகையையும், அந்த உதவுதொகை செலுத்துநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், 28 (3) ஆம் பிரிவின்கீழ், எந் தத் தேதியில் அவர் உதவுதொகை செலுத்துநரொருவராக இல்லாதொழி கின்றாரோ அந்தத் தேதிக்கு முன்னர், பல்கலைக்கழகத்தின் சேவையிலி ருந்து நீக்கப்பட்டவிடத்து, நிதியாளர் 30 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவரின் சேவைநீக்கத் தேதிவரை சகாய நிதியத்திலுள்ள அவ ரது வரவிலுள்ள முழுத்தொகையையும், அதன்மீது திரண்ட வட்டியையும் சேர்த்து, அந்த உதவுதொகை செலுத்துநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், பல்கலைக்கழகத்தின் சேவையி லுள்ளபோது இறக்குமிடத்து, 30 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, நிதியாளர், சகாய நிதியத்தில் அவரது கணக்கின் வரவில் திரண்டுள்ள முழுத்தொகையையும், இறந்த உதவுதொகை செலுத்துநரின் மரணச் சொத்துக்கு அல்லது அத்தகைய பணத்தொகைக்குச் சட்டமுறையாக உரித்துக் கொண்ட ஆளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

சகாய நிதியத்திலிருந்து செய்யப்பட்ட கழிப்பனவுகள் முதற் பொறுப்பாதல்.

30. இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள, எது எவ்வாறிருப் பினும், வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்திற்குப் பங்கமின்றி யும், பல்கலைக்கழகத்தினால் அவர் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த காலத் தின்போது எந்நேரத்திலும் அவரது நேர்மையின்மை, அல்லது அசட்டை காரணமாகப் பல்கலைக்கழகத்தினால் தாங்கப்பட்ட ஏதேனும் இழப்புத் தொகையும் அல்லது நட்டத்தொகையும், சகாய நிதியத்தில் அந்த உதவு தொகை செலுத்துநரின் கணக்கின் வரவிலுள்ள தொகைமீது முதற் பொறுப்பாக இருத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பணத்தொகை, 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் கொடுப்பனவு செய்யப் படும்போது, கழிக்கப்படலாம்.

## பாகம் VII

### நிதி

நிதி ஆண்டு.

**31.** அரசாங்கத்தின் நிதி ஆண்டு எதுவோ, அதுவே பல்கலைக்கழகத்தின் நிதியாண்டாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக நிதியம்.

**32.** பல்கலைக்கழகமானது, பௌத்த, பாளி பல்கலைக்கழக நிதியம் என அழைக்கப்படும் ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அதனுள்—

(அ) ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் ;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் ;

(இ) மானியங்களாக ஆணைக்குழுவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பணங்கள் ;

(ஈ) எவ்வகையான மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையும், பல்கலைக்கழகத்துக்குரியவையுமான வேறெல்லாப் பணங்கள்,

ஆகியவை செலுத்தப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் உதவிக்கான மானியங்கள்.

**33.** (1) ஒவ்வொரு நிதி ஆண்டும் தொடங்கியதன் பின்னர், திறைசேரியின் பிரதிச் செயலாளர், சாத்தியப்படக்கூடியவாறு விரைவாக, வருடாந்த ஒதுக்கீடு வகையாகவோ, அல்லது வேறு வகையாகவோ, பல்கலைக்கழகத்தின் உதவிக்கான மானியமாக அல்லது மானியங்களாக, பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைப் பல்கலைக்கழகத்துக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) முற்போந்த உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட எல்லாப் பணங்களும், இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்கள் எல்லாவற்றுக்குமாக, அல்லது அவற்றில் எதற்குமாக, பல்கலைக்கழகத்தால் பிரயோகிக்கப்படுதல் அல்லது செலவிடப்படுதல் வேண்டும்.

நிதியாளரின் கடமைகள்.

**34.** (அ) பல்கலைக்கழகத்தின் கணக்குகளை ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் வைத்திருத்தலும் ;

(ஆ) பௌத்த, பாளி பல்கலைக்கழக நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களைப் பெறுதலும், அத்தகைய பணங்களைப் பொருத்தமான கணக்குத் தலைப்புகளின்கீழ் வரவு வைத்தலும் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் எல்லாவற்றையுஞ் செய்தலும் ; அத்துடன்

(ஈ) அடுத்துவரும் நிதி ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும், எவையேனும் குறைநிரப்பு மதிப்பீடுகளையும் பேரவைக்காகத் தயாரித்தலும்,

பல்கலைக்கழக நிதியாளரின் கடமையாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக, வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம், பல்கலைக்கழகத்தின் கணக்குகளில் வெவ்வேறாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் பல்கலைக்கழகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் முறையே எந்த நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

35. பல்கலைக்கழகத்தின் வருடாந்த மதிப்பீடுகளும், வருடாந்த ஒதுக்கீடுகளும், வருடாந்தக் கணக்கீடுகளும் பேரவையால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மதிப்பீடுகளையும், ஒதுக்கீடுகளையும், பேரவையானது அது தகுந்ததெனக் கருதுகின்றவாறாகத் தீர்மானத்தின்மூலம் இசைவாக்கிக்கொள்ளுதல் அல்லது திருத்திக்கொள்ளுதல் அதற்கு சட்டமுறையானதாதல் வேண்டும். *வருடாந்த மதிப்பீடுகளையும் வருடாந்த ஒதுக்கீடுகளையும் பேரவை பரிசீலனை செய்தல்.*

36. அவசியம் ஏற்படும்போது எதிர்பாராத செலவுகளுக்கு ஈடுகொடுப்பதற்காகவும் செலவினங்களின் குறைநிரப்பு மதிப்பீடுகளை நிதியாளர் தயாரித்தலும், அத்தகைய மதிப்பீடுகளைப் பேரவை நிறைவேற்றுதலும், எக்காலத்திலும் சட்டமுறையானதாதல் வேண்டும்: *குறைநிரப்பு மதிப்பீடுகள்.*

ஆயின், அத்தகைய குறைநிரப்பு மதிப்பீடுகள், நிதி ஆண்டுக்குப் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட மானியத்தை விஞ்சுதலாகாது என்பதுடன், மீளவரும் தன்மையதான நிதிப் பொறுப்பு எதுவும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் முன்னங்கீகாரமின்றி உறப்படுதலுமாகாது.

37. அவசியம் ஏற்படும் விடயத்தில், திறைசேரியின் எழுத்திலான அங்கீகாரத்துக்கு அமைவாக, ஆண்டு மதிப்பீடுகளின் ஒரு வாக்குப்பணத்திலிருந்து வேறொன்றுக்கு நிதியங்களை மாற்றுவது சட்டமுறையானதாதல் வேண்டும். *நிதியங்களை ஒரு வாக்குப் பணத்திலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுதல்.*

38. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். *கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.*

39. (1) பல்கலைக்கழகமானது ஏதேனும் உள்ளூராதிகாரசபைக்கு எவையேனும் வீதவரிகளைக் கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். *குறித்த சில வீதவரிகளினின்று பல்கலைக் கழகம் விதிவிலக்களிக்கப்படுதல்.*

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், பயன்கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் VIII

### பொது

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்.

**40.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட, பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக, அல்லது பல்கலைக்கழகத்தின் எவரேனும் அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது, அத்தகைய ஆளால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காகத் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழகத்துக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர், கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பல்கலைக்கழகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, பல்கலைக்கழக நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது பல்கலைக்கழகத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள், பல்கலைக்கழகத்தின் நிதிகளில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான எவரேனும் ஆளினால், இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவு, அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில், அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலன்றி, பல்கலைக்கழகத்தின் நிதியங்களிலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

வெற்றிடங்கள் அல்லது குறைபாடுகள் தீர்மானங்களை அல்லது நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது என்பது.

**41.** பேரவையின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருக்கின்றமை காரணமாக அல்லது அதற்கான அத்தகைய உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருக்கின்றமை காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

கொடைகள் முதலியன.

**42.** பல்கலைக்கழகமானது, இச்சட்டத்திற்கு அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிக்கிணங்கவன்றி, அதன் உறுப்பினர்களில் எவருக்கும் அல்லது உறுப்பினர்களிடை மாணப் பணிக்கொடை தவிர்ந்த பிகையூதியம் எதனையும் அல்லது கொடையை அல்லது பண நன்கொடையைச் செய்தலாகாது.

43. பல்கலைக்கழகத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பேரவையின் எவரேனும் உறுப்பினரொருவரின் அல்லது பல்கலைக்கழகத்தின் எவரேனும் அலுவலரின் அல்லது சேவையாளரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது. நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது அவரது ஆதனத்திற்கெதிராக, எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

44. பல்கலைக்கழகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும். பல்கலைக் கழகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல்.

45. பல்கலைக்கழகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள், அட்டவணைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பல்கலைக் கழகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

46. (1) எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது விதித்துரைக்கப்பட்டுள்ளதோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் பேரவையானது ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) பேரவையால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

47. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தினால் தாபிக்கப்படும் பல்கலைக்கழகத்துக்கும், பல்கலைக்கழகம் தொடர்பாகவும் ஏற்புடையனவாதலாகாது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகா.

பொருள் கோடல்.

48. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"ஒன்றிணைந்த கல்லூரி" என்பது, ஒரு பிரிவேனையினால் முகாமை செய்யப்பட்டதும், இச்சட்டத்தின்கீழ் ஒன்றிணைந்த கல்லூரியொன்றாக அங்கீகரிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டதும் அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒரு கல்விசார் நிறுவனம் என்றும் பொருள்படும்;

"கல்விசார் நிறுவனம்" என்பது, பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்காகக் கற்கைநெறிகளை நடாத்தும் ஏதேனுமொரு நிறுவனம் என்று பொருள்படும்;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கும்;

"ஒழுங்குவிதி" என்பது, இச்சட்டத்தின்கீழ் பேரவையால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 60 ; (வெளிநாடு) ரூபா 80 ; ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*